| | | |
|---|---|---|
| சாட்சி : PW 1<br>திரு.தார்சிக் செபாஸ்டியன்<br>த.பெ. திரு. சவரிமுத்து | EP.84/2004 in<br>OS.866/1999 | 30.04.2026 |

3,4 எதிர்மனுதாரர்கள்/நிறைவேற்று மனுதாரர்கள் தரப்பில் ம.சா.1ன் குறுக்கு விசாரணை

1) எனது முதல்விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் எனது சகோதரி சொன்னதன் பேரில் தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். நான் இந்த 3ம் நபர் மனுவில் எனது சகோதரியையும், 6ம் எதிர்மனுதாரராக சேர்த்துள்ளேன் என்றால் சரிதான். இம்மனுவில் நான் என்ன புல எண்ணை குறிப்பிட்டு கட்சி செய்து வருகின்றேன் என்றால் புல எண்.314/22H. நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் நான் தூத்துக்குடியில் ஒரு பள்ளியில் பகுதி நேர ஆசிரியராக உள்ளேன்.

2) எத்தனை ஆண்டுகளாக மேற்படி ஆசிரியராக உள்ளேன் என்றால் 1991ல் இருந்து. அப்போதில் இருந்து நான் தூத்துக்குடியில் தான் உள்ளேன் என்றால் ஆமாம். எனது சகோதரி அசல் நிறைவேற்றுமனுவில் முன்னதாக ஒரு கோருரிமை மனுவை தாக்கல் செய்திருந்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். மேற்படி விபரம் எப்படி தெரியும் என்றால் எனது சகோதரியும், அண்டை வீட்டார்களும் சொல்லி தெரியும்.

3) மேற்படி மனுவில் இரு தரப்பிலும் கட்சி செய்து மேற்படி கோருரிமை மனு எனது சகோதரிக்கு பாதகமாக தள்ளுபடி செய்யப்பட்டது

என்றால் சரிதான். மேற்படி விபரம் எனது சகோதரி சொல்லியே எனக்கு தெரியும் என்றால் ஊரார் சொல்லிய பிறகே எனது சகோதரி சொன்னார். தற்போது வரை நான் தூத்துக்குடியில் தான் வசித்து வருகிறேன் என்றால் சரிதான்.

4) இம்மனுவில் நான் என்ன என்ன ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன் என்றால் பத்திரமும், பட்டா, சிட்டாவும் தாக்கல் செய்துள்ளேன். அதை தவிர வேறு ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் இந்த மனுவில் எவ்வித பத்திரமும், பட்டா, சிட்டாவும் தாக்கல் செய்யவில்லை என்றாலும், ஆனால் தாக்கல் செய்துள்ளதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

5) நான் இம்மனுவில் ஒரு வழக்கின் தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை ஆகியவற்றின் நகலை மட்டும் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையின் வழக்கு எண் என்ன என்றால் அ.வ.எண்.866/1999. நான் தாக்கல் செய்துள்ள தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை மேற்படி வழக்கிற்கானது அல்ல என்றால் சரியல்ல. அ.வ.எண்.866/1999 என்ற வழக்கில் யார் யார் தரப்பினர்கள் விபரம் தெரியுமா என்றால் பச்சமுத்துவின் வாரிசுகளும், ஆரோக்கியசாமி மகன் மைக்கேலும் தரப்பினர்கள்.

6) மேற்படி அ.வ.எண்.866/1999 என்ற வழக்கில் நான் தரப்பினராக இருந்தேனா என்றால் இல்லை, மேற்படி வழக்கு நடைபெறும் பொழுது அந்த விபரம் எனக்கோ, எனது சகோதரிக்கோ தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள கோருரிமை மனு குறித்த விபரம் எதுவும் எனக்கு தெரியாது

என்றாலும், நான் தாவா கிராமத்தில் இல்லை என்றாலும், எனது சகோதரியுடன் சேர்ந்து கூட்டுசதி செய்து இம்மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல.

மனு குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

ஒப்பம்/— ப. கோபாலஅரசி,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி.
இலால்குடி.

/உண்மை நகல்/

P GOPALA ARASI

Digitally signed by P GOPALA ARASI
Date: 2026.06.04 00:35:26 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
இலால்குடி.